# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35.

வள்ளுவர் ஆண்டு 2007 புரட்டாதி 6 | றம்ழான் 27 | (22-9-76) புதன் புத்தகம் 30 | இதழ் 44


# 1980வரை ஆட்சி நீடிப்பு?

## விலைக்கு வாங்கப்படக்கூடிய எதிர்க்கட்சி எம்.பி.க்கள் யார்?

## அரசியல் வட்டாரங்களில் பலவித ஹேஷ்யங்கள்

தேசிய அரசுப்பேரவையின் ஆயுட்காலம் அரசியல் சட்டப்படி 1977 மே 22ம் திகதியுடன்முடிவடைகிறது. இதை 1980வரை நீட்டுவதாக இருந்தால், அரசியல் சட்டத்தை திருத்தவேண்டும். அப்படி அரசியல் சட்டத்தை திருத்துவதானல் அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்கவேண்டும். அது இப்போது அரசுக்கு இல்லை; ஏதாவது ஒரு எதிர்க்கட்சியோ, அல்லது எதிர்க்கட்சிகளிலுள்ள சில எம். பீ.க்களையோ 'விலைக்கு' வாங்கினல் மட்டுமே அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்கும்! இந்த நிலையில் அரசின் சதிக்குப் பலியாகக் கூடிய — விலைக்கு வாங்கப்படக் கூடிய எம். பீக்கள் யார் என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது. இது சம்பந்தமாகப் பலவித ஹேஷ்யங்களும் அடிபட ஆரம்பித்துள்ளன.

1977மே திங்களில் தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடைபெறுமா அல்லது அதன் ஆயுள் மேலும் மூன்று ஆண்டுகட்கு நீடிக்கப்படுமா என்ற கேள்வியே இப்போது பல இடங்களிலும் விமர்சிக்கப்பட்டு வருகிறது.

பொதுத்தேர்தல் நடைபெறும் என்பதற்கு எதுவித உறுதியையும் அண்மைக் காலத்தில் பிரதமர் அளிக்கவில்லையென்பதை அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டும் அதே சமயம் பிரதமர் முன்னிலையிலேயே 1980வரை ஆட்சியை நீடிக்கவேண்டும் என்ற கோஷம் அவரது கட்சிக் கூட்டங்களிலே எழுப்பப்படும்போது, அவர் அதற்கு எதிராக எதுவும் கூருது மௌனமாக இருந்து வருவதையும் எடுத்துக் கூறுகிருர்கள். இதிலிருந்து ஆட்சியை நீடிக்கும் திட்டத்திற்கு பிரதமரும் உடந்தைதான் என்று ஒருவர் கருத வேண்டியுள்ளது.

ஆட்சியை நீடிப்பதாக இருந்தால் ஏதாவது ஒரு எதிர்கட்சியை, அல்லது எதிர்க்கட்சியிலுள்ள சில எம். பீக்களை அரசாங்கம் விலைக்கு வாங்கினல் மட்டுமே அது சாத்தியமாகும். அப்படியொரு சூழ்நிலை ஏற்பட்டு, ஆட்சியாளர் வலை

—4-ம் பக்கம் பார்க்க

### பாராளுமன்றத்தில் இன்றைய கட்சி நிலவரம்!

| | | |
|---|---|---|
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | — | 95 |
| ஐ. தே. கட்சி | — | 19 |
| லங்கா சமசமாசக் கட்சி | — | 16 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | — | 12 |
| கம்யூனிஸ்ட் கட்சி (எம். சி. சுப்பிரமணியமும் சேர்ந்து) | — | 7 |
| ஜாதிக விமுத்தி பெரமுனே | — | 2 |
| ஐ. தொ. கா. | — | 1 |
| சுயேச்சைகள் (தகநாயகா, தென்னக்கூன், மார்டின், ருக்மன்—) | — | 4 |
| சபாநாயகர் | — | 1 |
| மொத்தம் | | 157 |

### ஆபீஸ் பையன் கேட்கிருன்!

"இந்தியாவில குடிக்கிறதுக்கு 'பெர்மிட்' வேணும்; இலங்கையில அது தேவையில்லை—தாராளமாகக் குடிககலாம். அதை நினைத்து நாக்கில ஜலம் ஊற இங்கு வரும் கூத்தாடிகள்-போதாததற்கு குடித்துவிட்டுகட்டியணைத்து 'சோககுப்' பண்ணுவதற்கு கூத்திகளையும் கூடவே கூட்டி வரும் கூத்தாடிகள்— வந்தால் தங்கட அலுவலை பார்த்திட்டு பேசாமபோக வேண்டியதுதானே — தங்களுக்குத் தெரியாத இலங்கை அரசியலைப்பற்றி குடிவெறியிலே ஏன் உளறிவைக்கவேண்டும்? ஐயா ஜெமினி, அம்மா ராஜசிறீ, அல்ல... உங்களைத்தான் கேக்கிறன்..."

## ஒருவர் உயிர்ப்பலி ஒருவர் கைமுறிந்தது

### யாழ்ப்பாணத்தில் இராணுவ வெறியாட்டம்!

யாழ்ப்பாணத்தில் இராணுவ வெறியாட்டம் அதிகரித்துவருகிறது. இதன் காரணமாக அப்பாவி மக்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

இராணுவ ஜீப் வண்டியொன்று, கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில சட்டத்தரணியொருவரின் காரை முட்டி மோதிவிட்டு, தாவடியில் 33 வயதுடைய கந்தையா தர்மலிங்கம் என்ற நபரை மோதிக் கொன்றுவிட்டு, புன்னாலைக் கட்டுவன் —பலாலி வீதியில் ஓர் வாலிபருடன் மோதி அவருடைய கையையும் முறித்ததாக சொல்லப்படுகிறது. ஜீப்பில் மோதுண்டு இறந்ததாகச் சொல்லப்படும் தாவடி வாசி தர்மலிங்கத்தின் மனைவி நிறை கர்ப்பிணி என்றும் சொல்லப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்தவரான லிய

—4-ம் பக்கம் பார்க்க

### இன்றைய கருத்தரங்கு

இன்று மாலை 6மணிக்கு மூதறிஞர் தந்தைசெல்வாவின் இல்லத்தில் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கில் கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை, திரு. குலநாயகம் ஆகியோர் உரையாற்றுவார்கள். திரு. ஈழவேந்தன தலைமை வகிப்பார்.

## கேள்விப்படுகிறோம் உண்மையா?

● யாழ். பொலிஸ் நிலயத்தில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இம்சைப்படுத்தப்பட்டு அவரது உடமைகள் சேதப்படுத்தப்பட்டதாக சொல்லப்படுவதும், இதன் எதிரொலியாக 2-9-76ல் இருந்து இராணுவ பொலிஸ் அழைக்கப்பட்டதாக கூறப்படுவதும்— உண்மையா?

● யாழ். கச்சேரியில் இரவு காவல் புரியும் சிங்களப் பொலிசார் மதிலால் ஏறி வெளியேவந்து வீதியால் செல்வோரை மிரட்டுவதாகச் சொல்லப்படுவதும், இதுபற்றி அரசாங்க அதிபருக்கு அறிவித்தும்கூட நடவடிக்கையெடுக்கப்படவில்லையென்று கூறப்படுவதும் உண்மையா?

● யாழ். அரசாங்க அதிபராக அமரசேகரா இருந்த காலத்தில் கச்சேரியில் காவல் புரிந்த பொலிசாரின் உடமைகள் சில திருட்டுப் போனதும், அதன காரணமாக அவர்கள் தங்கும் அறைக்கு சுத்தம் செய்வதற்கு 'பியூன்'கூடப் போக முடியாது என்று தடைவிதிக்கப்பட்டதும்— அண்மையில் அமிர்தலிங்கம் அவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தின் பின் தமது அறையைச் சுத்தம் செய்யும்படி பொலிசார் காரியாலய உதவியாளரிடம் (பியூன்) கேட்டதாகவும், அதற்கு அவர் முன்னைய உத்தரவைக் கூறி மறுத்ததாகவும், இதனை பொலிசார் வேறுவிதமாக கூறி அரசாங்க அதிபரிடம் 'கோள்' மூட்டியதாகவும், இதனுல் எதுவித விசாரணையுமின்றி குறித்த பியூன் வேலை நீக்கம் செய்யப்பட்டதாகவும், இதை ஆட்சேபித்து சக ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ததையடுத்து, மீண்டும் அவ் ஊழியர் வேலைக்குச் சேர்க்கப்பட்டதாகவும்— சொல்லப்படுவது உண்மையா?

● யாழ்ப்பாணத்திலுள்ள சிங்களப் பொலிசார் தமிழ் பொலிசாருடன் சேர்ந்து கடமையாற்றுவதற்கு மறுத்துவருவதாகக் கூறப்படுவது உண்மையா?

## 'தமிழர் போராட்டத்தில் திருமலையின் முக்கியத்துவம்'

### 'பார் ஈஸ்டேன் எக்கனமிக் றிவ்யூ' கருத்து!

"இந்து சமுத்திரத்தில் அமெரிக்கக் கடற்படை உருவாக்கப்படுவதை மட்டும் எதிர்க்காமல் "இரு வல்லரசுகளின்" கடற்படை நடமாட்டத்தைக் கண்டித்து, கூட்டுச்சேரா நாநாட்டின் போது இலங்கை பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயகா தீர்மானம் கொண்டுவந்திருப்பதையடுத்து, "திருகோணமலையில் சீனக் கடற்தளம்" பற்றி மாஸ்கோ ஓலமிட்டிருக்கிறது. தனது பலமிக்க கடற்படைத் தளமாக இலங்கையை பயன்படுத்த சீன திட்ட போட்டுள்ளதென்றும், இதற்காக பீகிங் திருகோணமலைத் துறைமுகத்தில் அதிக ஆர்வம காட்டிவருவதாகவும், சோவியத் பேச்சாளரான நி. வி.

—4-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய ... விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்கச் செய்திகள்

## பட்டிருப்பு தொகுதி கூட்டணி கிளைகள்

பட்டிருப்புத் தொகுதியின் அமைப்புச் செயலாளர் திரு.த. கணேசபிள்ளையின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பட்டிருப்புத் தொகுதியின் பல்வேறு கிராமங்களிலும் அமைக்கப்பட்டிருக்கும் கிளைகள் வருமாறு:-

### மாங்காடு

தலைவராக, சி. அழகையா, செயலாளராக ச. யோகராசா, பொருளாளராக, ச. சுப்பிரமணியம், செயற்குழு உறுப்பினராக, திருவாளர்கள், எ. இளையதம்பி, மா. நாகமணி, சு. தங்கராசா. சி. அரசரத்தினம், சி. தெய்வநாயகம் சி. சுப்பிரமணியம் ஆகியோரும் தெரிவாகினர்.

### தேற்றாத் தீவு

தலைவர்: க. பரமலிங்கம் துணைத்தலைவர்: க. சண்முகம், செயலாளர்: க. விஞசித்தம்பி. துணைச்செயலாளர்: வி. முருகேசப்பிள்ளை, பொருளாளர்: சி. இளையதம்பி. செயற்குழு உறுப்பினர்கள் முறையே, கி. கிருஷ்ணபிள்ளை, வி. காசுபதி வே. தம்பிராசா, கு. சீவரெத்தினம், வி. வல்லிபுரம், சி. வல்லிபுரம், பொ. காசுபதி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

### களுதாவளை

தலைவர்: ஞா. பழனித்தம்பி துணைத்தலைவர்களாக. வே. தம்பியப்பா, க. முத்துலிங்கம். செயலாளராக. செ. அரசரெத்தினம், து. செயளாளராக கி. கனகரத்தினம், பொருளாளர் கா. செல்வராசா செயற்குழு உறுப்பினர்கள் முறையே, மா. தியாகராசா, சீ. இராசலிங்கம், சிவா தங்கத்துரை, மூ. கனகசபை செ. பேரின்பராசா, த. கணபதிப்பிள்ளை, வ. கனகசபை த. அருளம்பலம், மா. நல்லதம்பி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

### கோட்டைக்கல்லாறு

தலைவர்: இ. கந்தவனம் செயலாளர்: எஸ். தியாகராசா. பொருளாளர்: மு. விஞசித்தம்பி செயற்குழு உறுப்பினர்கள் மு. அரசரத்தினம், எஸ். ஆறுமுகம், சி. முருகுப்பிள்ளை, வி. தியாகராசா, க. கனகசபை, ம. மு. கோபாலபிள்ளை

### காக்காச்சிவட்டை

தலைவர்: வெ தம்பிராசா செயலாளர்: சா. அழகையா, பொருளாளர்: த. செல்லத்துரை, செயற்குழு உறுப்பினர்கள்: பூ. துரையப்பா, ச. மார்க்கண்டு, வே. நாகலிங்கம் வே. கிருஷ்ணபிள்ளை சு. தங்கையா, மு. கந்தசாமி

### ஆனைகட்டியவெளி

தலைவர்: பூ. முருகுப்பிள்ளை செயலாளர்: க. தங்கராசா. பொருளாளர்: சா. நாகலிங்கம். செயற்குழு உறுப்பினர்கள்: வே. கணபதிப்பிள்ளை, சு. சிதம்பரம், கா. இராசையா, த. சீனித்தம்பி, க. ஏகாம்பரம், பூ. கணேசபிள்ளை, வ. மயில்வாகனம், க. குணரத்தினம்.

### 13ம் கிராமம்

தலைவர்: பா. அருளானந்தம் உபதலைவர்: சீ. இராசையா. செயலாளர்: சி. பரசுராமன், உபசெயலாளர் இ. மேகநாதன் பொருளாளர்: சீ. முருகேசபிள்ளை. செயற்குழு உறுப்பினர்கள்: அ. கருணநாயகம் மு. தம்பிராசா, வே. சின்னையா, செ. மகேஸ்வரன், ஆ. பூபாலபிள்ளை, க. செல்லத்துரை, க. பாலசுந்தரம், இ. கனகசுந்தரம், எஸ். கோணேசபிள்ளை, நா. கோபாலபிள்ளை.

### 14ம் கிராமம்

தலைவர்: சி. கணேசபிள்ளை உபதலைவர்கள்: நா. கோணேசபிள்ளை, பி. பாக்கியராசா. இணைச்செயலாளர்: த. இராசநாயகம் வ. சோதிநாயகம். பொருளாளர்: வ. மூத்ததம்பி செயற்குழு உறுப்பினர்கள்: கா. தம்பிராசா, கு. பாக்கியராசா, சீ. தருமலிங்கம், வி. சிவலிங்கம் ம. அமரசிங்கம் கி. அருணசலம், செ. வெள்ளக்குட்டி, மு. கனகரத்தினம், ஆ. சின்னராசா, அ. உதயபாலன்.

### 38ம் கிராமம்

தலைவர்: பெ. இரத்தினசிங்கம் உப தலைவர்: த. திசவீரசிங்கம், செயலாளர்: வ. இரத்தினசிங்கம், பொருளாளர்: மு. சின்னத்தம்பி. செயற் குழு உறுப்பினர்கள்: சி. நாகரத்தினம், வ. பேரின்பராசா ப. ஞானமுத்து வ. கிருஷ்ணபிள்ளை, வ. கனகசிங்கம், க. கனகசூரியம்.

### 39ம் கிராமம்

தலைவர்: க. பாலிப்போடி உபதலைவர்: சி. சந்திரசேகரம்: செயலாளர்: கு. கனகசூரியம் உபசெயலாளர்: கு. கணபதிப்பிள்ளை பொருளாளர்: வ. நாகராசா, செயற்குழு உறுப்பினர்: சி. செல்வநாயகம் த. அழகானந்தம் க. பரமானந்தம், சி. இராசநாயகம், கா. இராசமாணிக்கம், ம. யோகராசா, க. கணேசபிள்ளை, க. மைக்கேல்

---

## தமிழர் விடுதலைக் கூட்டணி விசுவமடுக் கிளை

தலைவர்: திரு. இரா. கார்த்திகேசு, செயலாளர்: நா. குணநிதி, பொருளாளர்: செ. யோகநாதன், செயற்குழு: வே. அம்பலவாணர், உறுப்பினர்கள்: சு. சிறீதரன், இ. ஆறுமுகம், ப. வெ. ஜெயபாலன், க. மகேந்திரன், பத்மநாதன்.

---

## நாவந்துறை இளைஞர் பேரவைக் கிளை

29.8.76ஞாயிற்றுக்கிழமை பி.ப. 8 மணிக்கு சட்டத்தரணி ம. ஆ, யேசுதாசன் தலைமையில் நாவாந்துறையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. பின்வருவோர் ஆட்சிக்குழு அங்கத்தினராகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: செ. அமிர்தநாதன், உபதலைவர்: அருளப்பு நீக்கிலாஸ். இணைச்செயலாளர்கள்:-முத்தையா ஜெயசிங்கம், சு. நாகராசா, பொருளாளர்: யோ. இம்மானுவேல். காரியக்குழு: தி. மிக்கேல் (ரவீந்திரன்) நீ. மரியதாஸ், (பாலசந்திரன்) எஸ். ஜெயராஜ், அ. தேவதாஸ், டா. தேவகுமார், ஞூ. அமிர்தநாதர், ச. ஜெமெசியன், [illegible] கிலாஸ், ப. அமிர்தநாதர், செ. செல்வகுமார்.

## இயற்றாலை த. இ. பே. கிளை

தலைவர்: சி. குஞ்சுராசா. உபதலைவர்: க. செல்வநாயகம். செயலாளர்: செ. கதிர்காமு. உபசெயலாளர்: இ. சந்திரசேகரம். பொருளாளர்: க. சிதம்பரநாதன் இவர்களுடன் 11 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

## அக்கரைப்பற்று த. வி. கூ. கிளை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அக்கரைப்பற்றுக் கிளையின் தலைவராக திரு. த. மயில்வாகனம் (முறிவு வைத்தியர்) அவர்களும் உபதலைவர்களாக திரு. சோ. பாலசுந்தரம் அவர்களும் திரு. மு. கு. சிவகுருநாதன் அவர்களும் செயலாளராக திரு. க. பீதாம்பரம் அவர்களும் உபசெயலாளராக திரு. இ. நடராசா அவர்களும பொருளாளராக செல்வன் கணேஷ் அவர்களும் கணக்காளராக திரு. பாலச்சந்திரன் அவர்களும் மாவட்ட தலைமைப் பீட இணைப்புப் பிரதிநிதியாக இ. கு. குருக்கள் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டதுடன் திரு. வ. ச. சிவம், திரு. ஐ. கே. சுரேந்திரன், திரு. க. மார்க்கண்டு, செல்வன் க. சிவஞானச்செல்வம், செல்வன் சீ. சதாசிவம், செல்வன் க. பேரின்பராசா, செல்வன் ச. தர்மலிங்கம், செல்வன் க. யோகராசாஆகியோர் அடங்கிய நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

இப்பகுதிகளின் கிளை அமைப்பு வேலைகளுக்காகத் தலைவர் திரு. த. மயில்வாகனம், திரு. ஐ. கே. சுரேந்திரன், திரு. க. மார்க்கண்டு திரு. இ. நடராசா, செல்வன் சீ. சதாசிவம், செல்வன் ம. பரராசசிங்கம், செல்வன் க. சிவஞான செல்வம், திரு. க. பேரின்பராசா ஆகியோரைக்கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

---

## செல்வநாயகபுரம் த. வி. கூ. கிளை

மேற்படிக் கிளையலுவலக அங்குரார்ப்பண வைபவம் 15-8-76 ஞாயிறு பி. ப. 5.00 மணியளவில் தமிழர் விடுதலைக் கூட்டணித் திருகோணமலைக் கிளை செயலாளர் திரு. வீரசுப்பிரமணியம் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு நடப்பு வருடத்துக்கு கீழ்க்கண்டோர் ஏகமனதாக தெரிவானர்கள்.

தலைவர்: சு. பி. முருகேசு. உபதலைவர்: ரி. கே. கிட்டப்பா. செயலாளர்: சிவநாதன். உபசெயலாளர்: யோகராசா. பொருளாளர்: இ. ராசு.

நிர்வாகசபையினர்: திருவாளர்கள் ஆ. கணேஸ். சி. தர்மலிங்கம். செ. சிறீதரன். இ. [illegible] பிள்ளை. ரி. இருநாவுக்கரசு. சி. வேலு. தி. தம்பிராசா.

## தர்மபுரத்தில் த. வி. கூ. கிளை

தர்மபுரத்துச் சந்தை மைதானத்தில் அண்மையில் தமிழர் கூட்டணியின் புதிய கிளை தெரிவு நடைபெற்றது. தலைவர்: செ. புஷ்பராசா, உபதலைவர்: திரு, இ. தங்கராசா, செயலாளர்: மு. சிவஞானசுந்தரம், இணைச்செயலாளர்: மூ. செல்வரட்ணம், பொருளாளர்: சி.கனகராசா, செயற்குழு உறுப்பினர்கள்: வெ. ஆராசு. இ. பிரான்சிஸ், மா. இலட்சுமணன், வ. அழகராசா, க. குணம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். தமிழ் இளைஞர் பேரவையும் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது.

---

## வட்டக்கச்சி த. வி. கூ. கிளை அங்குரார்ப்பணம்

வட்டக்கச்சி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை அங்குரார்ப்பணம் அண்மையில் கிளிநொச்சி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கர் அவர்களின் தலைமையில் நடைபெற்று, பின்வருவோர் செயற்குழு உறுப்பினர்களாக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்:- தலைவர்: திரு. வை. வேலுப்பிள்ளை, துணைத்தலைவர்கள்: திருவாளர்கள்: ம. நீக்கிலாஸ், தி. இராமச்சந்திரன், பொ. பத்மநாதன், இணைச்செயலாளர்கள்: திருவாளர்கள்: மா. இராஜரெத்தினம், மு. குமாரசாமி, பொருளாளர்: திரு. நா. பசுபதி, செயற்குழு உறுப்பினர்கள்:- திருவாளர்கள்: அ. சிவஞானம், சி. வாரித்தம்பி, வை. விஜயரெத்தினம், அ. உதுமாலெப்பை, பொ. பாக்கியநாதன்ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## தமிழ்இளைஞர்பேரவை சுருவில் கிளை

4-9-1976 நடைபெற்ற பொதுக்கூட்டத்தில பின்வருவோர் தமிழ் இளைஞர் பேரவை சுருவில் கிளை நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்: தலைவர்: கி. திருஅருள், காரியதரிசி: ந. பிரகதீஸ்வரன், தனதிகாரி, வே.த.வ. பாலசிங்கம, செயற்குழு உறுப்பினர்கள்: இலெட்சுமிகாந்தன், யோகலிங்கம் சிவகுமார் சிவகுரு, சு. கிருஷ்ணபிள்ளை.

---

## குண்டசாலை தமிழ் இளைஞர் பேரவை

குண்டசாலை தமிழ் இளைஞர் பேரவை கிளை 29.8.76 மாலை 5மணிச்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது இதில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. த. ம. தேவேந்திரன், உப-தலைவர்: வெ. மகேந்திரன், செயலாளர்: எஸ். சிவநேசன், துணைச்செயலாளர்: பரதலிங்கம், பொருளாளர்: திரு. பா. சிவபாலராசா, நிருவாக சபை உறுப்பினர்களாக:-ஆர். இராசசேகரம், ஆ. கணேசலிங்கம், ச. குகசீலன்.

## தமிழ் இளைஞர் பேரவை வவுனியா தொகுதிக் கிளை நிர்வாகிகள்

வவுனியாத் தொகுதியின் தமிழ் இளைஞர் பேரவைக் கிளைக் கூட்டம் அண்மையில் வவுனியாவில்நடைபெற்றது. திரு. ஈழவேந்தன் சிறப்புரையாளராகக் கலந்துகொண்டார்.

கீழ் காண்போர் கிளை நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. சு. செல்வராசா (வவுனியா) உபதலைவர்: திரு. வி. மார்க்கண்டு—(செட்டிகுளம்) திரு. செ. செல்வராசா — (கோரமோட்டை) செயலாளர்: திரு. த. ம. பீற்றர் பொன் கலன்ட் — (அமைப்பாளர்) உபசெயலாளர்: திரு. பொன். பத்மநாதன்—நெடுங்கேணி பொருளாளர்: திரு. திருப்பதி—(வவுனியா) நிர்வாக் சபை உறுப்பினர்கள்: திருவாளர்கள் மு. சிவபாதம் — நெடுங்கேணி. மு. பரமநாதன் — கனகராயன்குளம். ந. தருமலிங்கம்—புளியங்தளம். க. நடராசா. மகேந்திரராசா—சம்மளங்குளம். ச. சைமன் பிள்ளை — பெரியதம்பனை. சி. கணபதிப்பிள்ளை செட்டிகுளம். க. பஞ்சலிங்கம் — பாவற்குளம். சி. தேவராசா —இளமருதங்குளம். கந்தசாமி—ஓமந்தை. ஆ. சிதம்பரநாதன்—பம்பைமடு. செ. பத்மநாதன் — வவுனியா. பொ. சோமசேகரம் — வவுனியா. சீவரத்தினம் — வவுனியா. சூரியகுமார் — வவுனியா.

---

## நெடுங்கேணி தமிழ் இளைஞர் பேரவை

நெடுங்கேணி தமிழ் இளைஞர்பேரவையின் புனரமைப்புக் கூட்டம் அண்மையில் நெடுங்கேணி கி. மு. சங்க மண்டபத்தில் திரு. சி. செல்வராசா தலைமையில் நடைபெற்ற பொழுது பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர் — தலைவர்: சி. செல்வராசா. உபதலைவர்: மூ. சின்னையா. செயலாளர்: பொன் பத்மநாதன் துணைச்செயலாளர்: மு. சிவபாதம் (முத்துச் செல்வா) பொருளாளர்: வ. பூபாலசிங்கம். துணைப் பொருளாளர்: செ. சுந்தரம் பிள்ளை. கணக்குப் பரிசோதகர்: க. ஜெயக்கொடி ஏழு பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

---

## மன்னார் கோவிற்குளம் புதுக்குளம் த வி. கூ. கிளை

கடந்த 3-8-76இரவு8மணியளவில் கோவிற்குளம் கிராம முன்னேற்றச் சங்க தற்காலிக பணிமனையில் திருவாளர் வே. கைலாயபிள்ளை (இலுப்பை கடவை கிராம சபை முதல்வர்) தலைமையில் கூடியது. அவ்வமயம் இவ் விடுதலை இயக்கத்தின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

தலைவர்: பொ. கிருபாகரன். உபதலைவர்: அ. சிற்றம்பலம். செயலாளர்: பொன். இராமநாதன். இணைச் செயலாளர்கள்: கா. தனபாலசிங்கம், த. தருமலிங்கம். பொருளாளர்: க. சிவசோதிராஜா. பத்திராதிபர்: ம. நாகரத்தினம்(ராஜா) 12 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனையில் முஸ்லிம்களின் நிலங்களுக்கு ஆபத்து

## சிங்களவர் அத்துமீறிக் குடியேற்றம்! அரசியல் அதிகாரியும் உடந்தையா?

## இஸ்லாமிய இணைப்பு பேரவை கேள்வி!

**கல்முனையில் முஸ்லிம்களுக்கு சொந்தமான நிலங்களில் சிங்களவர்களை அத்துமீறிக் கொண்டுவந்து குடியேற்றும் பாரபட்ச இனவிரோத நடவடிக்கையை கண்டித்து இஸ்லாமிய இணைப்பு பேரவையின் 'கல்முனைக் கிளை செயலாளர் மருதூர் வாணன் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்:—**

கடந்த வருடம், கல்முனை நகரில் மக்கள் வங்கியின் முன்பதாகவுள்ள முஸ்லிம்களின் நிலங்களில் சிங்களவர்களைக் குடி ஏற்றியபோது, நாங்கள் எதிர்த்துப் போராடியதும், கல்முனை எம். பி. பாராமுகமாயிருந்ததும், சோமரத்தினவின் கூலிப் படையினர் சந்தாங்கேணி, சந்தை வீதிகளில் அத்துமீறிக் குடியேறியதும், அதையும் நாங்கள் எதிர்த்துப் போராடி வந்ததையும், கல்முனை மக்கள் நன்கறிவார்கள்.

அத்துமீறிக் குடியேறும் எவரையும் அரசு அனுமதிக்கவில்லை, என்று கூறும் அரசின், அரசியல் அதிகாரியாக இருக்கும், அமைச்சர் சோமரத்தின, தமிழ்பேசும் மக்களை நசுக்கி; எங்களது நிலங்களைச் சுவீகரித்து வருகின்றார். சோமரத்தினவை அணுகிய முஸ்லிம் எம்பிக்கள் ஒருசிலர், இப்போது அரசுக்கு வால் பிடித்து, தங்கள் தங்களின், சில இழந்துபோன சொந்த நிலங்களை மட்டுமே மீட்டு வருகின்றனர். பாட்டாளி, விவசாயி சோசலிசம் பேசும் இவர்கள், எங்கள் தமிழர் கூட்டணி ஆதரவாளர்களின் நிலங்களை மட்டும் சுவீகரித்து சிங்களக் காடையர்களுக்கு வலிந்துகொடுத்து, பொலிஸ் பாதுகாப்பும் கொடுத்து வருகின்றனர்.

"தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைக் கொடுத்து பாகுபாடின்றிக் காப்பாற்றி வருகிறோம்" என்று கூறும் அம்மாவின் ஆட்சியிலே இப்போது, கல்முனை வாடிவீட்டு வீதிகளில் உள்ள முஸ்லிம்களின் பிரதேசங்களில், காலி, அப்பாந்தோட்டைப் பகுதியிலுள்ள சுமார் நூற்றி ஐம்பது சிங்களவர்கள் அத்துமீறிக் குடியேறியுள்ளனர். இவர்களைச் சோமரத்தினவின் ஆதரவாளர்களான சிங்களவர்கள், கல்முனைச் சந்தையின் தெற்கே, பன்சலை அமைத்து, அதன் சுற்றுடலிலுள்ள முஸ்லிம்களின் காணிகளையும் சுவீகரித்துக் குடியேற்றி வருகின்றனர். இந்தச் சிங்களவர்கள் நீதிகேட்டுப் போராடிய, சில இஸ்லாமியர்களை, சோமரத்தினவின் தூண்டுதலிற் கைதுசெய்வித்து, படாதபாடெல்லாம் படுத்தி, பயமுறுத்தினார்களாம்.

அரசகட்டிலில் செல்லப் பிள்ளையாக, கல்முனை எம்.பி. இருந்துவரும் அதேவேளையில் அவரின் பிரதேசத் தொகுதி முஸ்லிம்களின் காணிகளைச் சோமரத்தினவின் காடையர்கள் சுவீகரித்து அத்துமீறிக் குடியேறி, அப்பாவி இஸ்லாமிய இளைஞர்களைப் பகைப்புலமாக்கி பொலிசாரின் ஆக்கினைக்கு உள்ளாக்கி அடித்து நொருக்குமட்டும் பாராமுகமாக இருக்கிறார் எம். பி. அசமது.

இனிமேல் இந்தக் கொடுங்கோலாட்சியாளர்களுக்கு எதிராக இஸ்லாமிய இணைப்புப் பேரவையினர், வக்கிரப் போராட்டம் நடாத்தி இழந்துபோன உரிமைகளைப் பெற்றெடுக்கும் காலம் வெகுதூரத்திலில்லை.

கல்முனைப் பிரதேசத்தில் அத்துமீறிக் குடியேறிய சிங்களவர்களை உடனே வெளியேறும்படி, அரசியல் அதிகாரி கட்டளை இடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## மண்டூரில்காவடி!

தமிழினத்துக்காக சிறையிலிருக்கும் தமிழ் இளைஞரின் விடுதலைக்காகப் பிரார்த்தித்து திரு. பூ. கணேசலிங்கம் தலைமையில் கடந்த 7-9-76ல் 40 இளைஞர்கள் மண்டூர் கந்தசாமி கோவிலை நோக்கி காவடி எடுத்தனர். தம்பலவத்தையிலிருந்து மண்டூருக்கு இக்காவடி எடுக்கப்பட்டது.

## மறக்கொணாத் தொண்டர்!



தமிழ்மொழி இனப்பற்றும் தமிழ்ஈழ விடுதலை வெறியும் கொண்டு செயற்பட்டு வந்து ஓராண்டுக்குமுன்னர் சென்னையில் திடீரென மறைந்த நண்பர் இராசரத்தினத்தின் நினைவு தமிழர் விடுதலை இயக்க நண்பர்களிடையே என்றும் மங்காது மறையாது. தந்தை செல்வாவின் தொண்டனாய், தமிழரசுகட்சியின் அசைக்கமுடியாத உறுப்பினனாய், தமிழர் கூட்டணியின் நிர்வாகச் செயலாளராக விளங்கிய திரு. இராசரத்தினம், சென்னையில் இருக்கும்போது எழுதிய **"தமிழனுக்கு ஒரு நாடு வேண்டும் ஏன்"** என்ற நூலைக் கண்டு இலங்கை அரசு பீதியடைந்து அதைத் தடைசெய்துள்ளது. இராசரத்தினத்தின் நினைவு என்றும் தமிழ் ஈழத்தில் நிலைத்து நிற்கும்!

## நெடுங்கேணியில் காவடி

சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் விடுதலை வேண்டி, நெடுங்கேணி தமிழ் இளைஞர் பேரவையினர் நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் ஆலயத்தில் நேர்த்தி வைத்து காவடி எடுத்தனர்.

மேற்படி ஆலய வருடாந்த பொங்கல் தினமான 4-9-76 சனிக்கிழமை நெடுங்கேணி ஆதி ஐயனார் ஆலயத்திலிருந்து காவடிகள் எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வெழுச்சிக்காவடி ஊர்வலத்தின்போது — சிறை வாழ் தமிழ் இளைஞர்களின் நலன் குறித்தும்—சக்தி மிக்க ஐயனாரை வேண்டியும் கோஷங்கள் எழுப்பிய வண்ணம் நெடுங்கேணி தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த இளைஞர்கள் முன்னே செல்ல பெருந்திரளாக கலந்துகொண்ட மக்கள் தொடர்ந்து கோஷங்களை எழுப்பிச் சென்ற சம்பவம் முன்னெப்பொழுதுமில்லாத எழுச்சியையும் உணர்ச்சியையும் ஊட்டிவிட்டது.

செடில்கள் குத்தியும் உதயசூரியன்— கொடியைத் தாங்கிய காவடிகள் உட்பட 17 வாலிபர்கள் காவடிகள் எடுத்திருந்தனர்.

### கூட்டணி பெருவெற்றி

கடந்த 12-9-76 அன்று நடந்த ஸ்கந்தபுரம் பலநோக்கு கூட்டுறவு சங்க கிளை இல. 10 குழு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட ஒன்பது வேட்பாளர்களும், கிளிநொச்சி தொகுதி சிறீலங்கா சு. கட்சி வாலிப முன்னணித்தலைவர் ப. நவநீதராசாவையும் அவருடைய சீடர் எண்மரையும் தோற்கடித்து அமோக வாக்குகளால் வெற்றியீட்டினர். ப. நவநீதராசா முன்னைநாள் கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபைத்தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈழத்து முஸ்லிம்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும்

'பாலஸ்தீனத்தில் இருந்து அநியாயமாக பாலஸ்தீனியர்கள் துரத்தப்பட்டு இஸ்ரவேல் நாடு ஸ்தாபிக்கப்பட்டிருப்பதை வரவேற்பவர்களாகவும், அதை ஆதரிப்பவர்களாகவும் அதையே ஆதாரம் காட்டுபவர்களாகவுமே தமிழ்த் தலைவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள்— அதன் மூலம் அராபிய மக்களினதும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தினரதும் விரோதிகள் என்று அவர்கள் ஈழத்து முஸ்லிம்களால் கணிக்கப்படுகின்றனர். இதனாலேயே தான் முஸ்லிம் மக்களதும், தலைவர்களது ஒத்துழைப்போ அனுதாபமோ இவர்களுக்கு இதுவரை கிடைக்காமலிருக்கலாம் என்பதே எனது அபிப்பிராயம்" என்று அண்மையில், யூ. என். பி. யில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரு முஸ்லிம் பிரமுகர் பேசியிருக்கின்றார்.

தமிழர் கூட்டணியின் தலைவர்களைப் பொறுத்தவரையில் உள்நாட்டுப் பிரச்சினையே அவர்களுக்கு முக்கியமே ஒழிய வெளிநாட்டுப் பிரச்சினைகள் அல்ல. ஈழத்தில் தாம் நடத்தும் இனவிடுதலைப்போராட்டத்தை இலகுவான முறையில் மக்களுக்குப் புரியவைப்பதற்காகவே பிறநாட்டு விடுதலை போராட்டங்களை எடுத்துக் காட்டாக அவர்கள் கூறுகிறார்கள்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு கூட்டுச்சேரா மாநாட்டில் பார்வையாளர்களாக இடம் அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போது — தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதுபோன்ற ஒரு விடுதலை இயக்கம்தான் என்று அறிவித்ததன் மூலம் பாலஸ்தீனவிடுதலை இயக்கத்தை ஏற்றுக்கொண்டவர்கள் தான் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் என்பதை முஸ்லிம் சமுதாயம் உணராமல் இருக்கமுடியுமா?

கிழக்குப் பாகிஸ்தானின் முஸ்லிம்கள் ஆக்கிரமிக்கப்பட்டு, அடித்துத் துரத்தப்பட்டு, அபலைகளாக, அகதிகளாக அயல் நாட்டைச் சரணடைந்து.பாரதம் அந்த முஸ்லிம்களுக்காக போர் தொடுத்து விடுதலை பெற்றுக்கொடுத்ததைக் [illegible] ஆதரித்தப்பேசியவர்கள் தான் தமிழர் விடுதலைக் கூட்டணியினர்.

முஜிபுர் ரஹ்மானின்வெற்றியை — விடுதலையைப் பாராட்டியவர்களும், அதே வேளையில் அந்த விடுதலை வீரனின் அநியாயப் படுகொலைக்குமாக கண்டனக் குரலையும் எழுப்பியவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தான்.

இவை அனைத்தையும்விட அண்மையில் புத்தளத்தில் நடந்த படுகொலைகளுக்கும், பள்ளிவாசல் நொருக்கல்களுக்கும் அனைவருக்கும் முன்னோடியாக தேசியப் பேரவையில் கண்டனக் குரல் எழுப்பி விசாரணைக் குழு நியமிக்கும் படிகோரியவரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் தந்தை செல்வா அவர்கள் தான்.

இலங்கையின் பெரும்பான்மை இனத்துடன் ஒட்டிக்கொண்டு வாழவேண்டும் என்று தற்போது உபதேசிக்கும், ஐக்கியதேசியக் கட்சி [illegible] சிங்களத் தலைவர்கள் புத்தளத்தில் ஏற்பட்ட கலவரத்தினால் பாதிக்கப்பட்ட அபலை முஸ்லிம்களுக்காக ஏன குரல் எழுப்பவில்லை? அப்படி அனுதாப மில்லாத ஐக்கிய தேசியக்கட்சியில் நம்பிக்கை வைத்து அதே வேளையில் புத்தளம் முஸ்லிம்கள் பிரச்சினையை தங்கள் சொந்தப் பிரச்சினையாக எடுத்து நடவடிக்கைமேற்கொண்ட, கொண்டுள்ள தமிழர் கூட்டணியினரை முஸ்லிம் சகோதரர்கள் இன்றும் விரோதிகள் என்று கருதுகிறார்கள் என்ற ஆதாரமற்ற பேச்சுகளுக்கு இஸ்லாமிய சகோதரர்களை பலியாக்கமுடியாது என்பதை இப்படி உரைப்பவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இஸ்லாமியர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினரை ஏற்றாலும் சரி ஏற்காவிட்டாலும் சரி தமிழ் பேசும் மக்கள் என்ற முறையில் இஸ்லாமியர்களுக்காகவும் கூட்டணி போராடியே தீரும்.

— நாவண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# 'பிரிவினைக்குப் போராடும் தமிழ் இளைஞர்கள்

# மொழிச்சலுகையால் திருப்தியடையமாட்டார்கள்!

## அமெரிக்க சஞ்சிகை 'நியூஸ்வீக்' கருத்து!

'சிங்களவர் இப்போது அமைதியாக இருந்தபோதிலும், இலங்கையின் தமிழர்கள் வாழும் பிரதேசமாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காலமறிந்து வெடிக்கும் குண்டுபோல தமிழ் இளைஞர்கள் காத்திருக்கிறார்கள். தமிழ்த் தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுபவர்களால் ஓராண்டுக்கு முன்னர் வட இலங்கையின் தலை நகராகிய யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி மேயர் சுட்டுக்கொல்லப்பட்டார். அதிலிருந்து தமிழ் இளைஞர் மத்தியிலுள்ள தீவிரவாதிகள் தனிநாடு கோரித் தீவிர போராட்டம் நடத்திவருகிறார்கள். இதன் பயனாக 29 தமிழர்கள் இப்போது சிறையிலிருக்கிறார்கள். இவர்களில் 7பேர் துரையப்பா கொலைக்காக குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர். ஏனையவர் குற்றச்சாட்டு ஏதுமின்றி சிறைவைக்கப்டுள்ளனர்.

தமிழை ஆட்சிமொழியாக்குவதாலும் கல்வித் துறையிலுள்ள பாரபட்சங்களை நீக்குவதானாலும், சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமுள்ள பிரச்சினையில் ஒரு சமரச இணக்கம் காண முடியும் என்று மூத்த தமிழ்த்தலைவர்கள் சிலர் நினைக்கின்றனர். ஆனால் அது சுலபமானதல்ல!

தமிழை வடக்கு, கிழக்கில் நிர்வாக மொழியாக்கும் முயற்சியை இரு சிங்களக்கட்சிகளுமே எதிர்த்துள்ளன. இப்போதும் சிங்களவர்களின் மனததில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின்போது தமிழர்கள் அனுபவித்த சலுகைகளே பெரிதாகத்தெரிகின்றன. அதுமட்டுமன்றி சலுகைகள் வழங்கப்படுவதை மூத்த தமிழ்த் தலைவர்கள் ஏற்றுக்கொண்டாலும் கூட தமிழ் இளைஞர்கள் அதை ஒருபோதும ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்!'

இவ்வாறு 'நியூஸ் வீக்' (News week)எனும்அமெரிக்க சஞ்சிகை 6-9-1976 இதழில் Sri Lanka -Time Bombஎனும் தலைப்பிட்டு எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது.

## செயல்அதிபரிடம வேல்விழா நிதி கையளிப்பு!

சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் குடும்பத்துக்கு உதவவும், சட்ட உதவிக்குமாக தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையினர். வேல் விழாவின் போது உண்டியல் மூலம் சேர்த்த தொகையாகிய ரூபா 1412 சதம் 35ஐயும் அண்மையில் தந்தைசெல்வாவின் இல்லத்தில் வைத்து தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயல் அதிபர் திரு. அமிர்தலிங்கம் அவர்களிடம் கிளையின் பொருளாளர் திரு. க. உமா மகேஸ்வரன் கையளித்தார். இந்த நிதிக்கு ஆர்வமுடன் நிதியளித்ததமிழன்பர்கள் அனைவருக்கும் தமிழ் இளைஞர்பேரவை தன்னுடைய நன்றியைத் தெரிவித்துள்ளது.

## சேயன் ஆஸ்பத்திரியில்!

வெலிக்கடைச் சிறைச் சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த சேயன் (செயராசா) தற்போது சுகவீனம் காரணமாக சிகிச்சைக்காக யாழ் பெரியாஸ் பத்திரியில் 32வது வார்டில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

## மகளிர் பேரவையின பிரார்த்தனை!

தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக் கிளையினர் தமிழ் இனததின் நலன் வேண்டி ஒவ்வொரு வாரமும் பிரார்த்தனையும் வழிபாடும் செய்துவருகின்றனர். பேரவையின் பிரார்த்தனை இவ்வாரம் வழமைபோல் 24-9-76 வெள்ளிக்கிழமை மாலை 5 30 மணிக்கு கொட்டாஞ்சேனை முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெறுகிறது. தமிழ் மகளிர் அனைவரையும் இப்பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு பேரவை அழைக்கிறது.

# சுதந்திரன்

SUTANTIRAN

## 9 இளைஞர்களும் 1 யுவதியும் பிணையில விடுதலை!

புலோலி வங்கிக் கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர்களில் 10 பேர் தலா ரூபா 25,000 சரீரப் பிணையில் பருத்தித்துறை நீதவானால் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களின் பெயர்கள் வருமாறு:- த. கென்ஸ்மோகன, ச சபாரத்தினம், க. சந்திரமோகன், பொ. அம்பிகாபதி, செ. யோகன், சி. வரதராசா, சி. நித்தியானந்தம், செல்வி. சி. ஜீவரட்ணராணி, என். மார்க்கண்டு, எஸ். கமிலஸ்.

இவர்களில் முதலிலுள்ள எண்மரும் வெலிக்கடை சிறையிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டு, அங்கு அவர்களுக்கு விடுதலை உத்தரவு வழங்கப்பட்டதையடுத்து, அவர்கள் வெளியேவந்த சமயம், மீண்டும் கைது செய்யப்பட்டனர். மறுநாள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது இவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்கள் 30-9-76ல் இவர்கள் நீதிமன்றத்துக்கு வரவேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இச்சம்பவத்துடன் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டோரில், த. தங்கமகேந்திரன், எஸ். நல்லையா எஸ். ஜெயக்கொடி, ஜே. டி. பி. ஜெயம் ரீ. தவராசா, என். சந்திரமோகன், வீ. மங்கையர்க்கரசி, சி. புஷ்பராணி ஆகியோர் வெலிக்கடையிலும் லே. பாலகுமார் யோகநாதன் சற்குணநாதன் ஆகியோர் யாழ் சிறையிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

## அமரர் அரியநாயகம் நினைவு விழா

12-9-76ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4-00 மணியளவில் தம்பிலுவில் மகா வித்தியாலயத்தின் எதிரில் திரு. பூ. விநாயகமூர்த்தி அவர்களின் வளவில் கிளைத் தலைவர் திரு. க. சிந்தாத்துரை அவர்களின் தலைமையில் அமரர் அரியநாயகம் அவர்களின் 3வது நினைவு தின விழா ஆரம்பமாகியது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் அமரரின் சமாதிக்குச் சென்று மக்கள் மலர்தூவி அஞ்சலிசெலுத்திவிட்டு ஊர் வலமாக கூட்டம் நடைபெற்ற இடத்தை வந்தடைந்தனர். ஊர்வலத்தில் மட்டுநகர் முதல்வர் திரு. இராசதுரை; கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. ஆனந்தசங்கரி பொத்துவில் பிரதிநிதி ஜனாப் மஜீத். முன்னாள் செனட்டர் திரு. மு. மாணிக்கம், திரு. சாம். தம்பிமுத்து திருமதிகள், ஆனந்தசங்கரி, கலா தம்பிமுத்து, லீலா இராசமாணிக்கம். ஆகியோருட்பட நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டனர்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் அமரர் அரியநாயகம் அவர்களால் பாடப்பட்ட "எங்கள் ஈழத்தமிழ் நாடு" என்னும் கீதத்தை திரு. இராசதுரை பா. உ. பாட கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து அமரர் அரியநாயகம் அவர்களின் வாழ்க்கையை சித்திரிக்கும் அப்போர் அரியநாயகம் என்னும் சிறு புத்தகம் ஒன்று திருக்கோவிலைச் சேர்ந்த திரு. எஸ். பி. கனக சபாபதி என்னும் இளைஞர் தொகுத்தளிக்க திரு. க. சிந்தாத்துரை வெளியிட்டு வைத்தார்.

இதன் முதலாவது பிரதியை மட்டக்களப்பு முதல்வர் திரு. இராசதுரையும் இரண்டாவது பிரதியை பொத்துவில் பிரதிநிதி ஜனாப் மஜீதும் மூன்றாவது பிரதியை கிளிநொச்சி பிரதிநிதி திரு. ஆனந்தசங்கரியும் பணங்கொடுத்து பெற்றனர். இதைத்தொடர்ந்து பல பிரமுகர்களும் புத்தகப்பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். கூட்டத்தில் அமரர் அரியநாயகம் அவர்களின் சேவையைப்பற்றி திரு. இராசதுரை பா. உ. திரு. ஆனந்தசங்கரி பா. உ. ஜனாப் மஜீத் பா. உ. திரு. மு. மாணிக்கம் திரு. இ. வி சிவஞானசெல்வம் குருக்கள், திரு. யோகசுந்தரம் திருமதி- கலா தம்பிமுத்து ஆகியோருட்பட பலர் பேசினர். முடிவில் செயலாளர் நன்றி கூறினார்.

## தமிழா போராட்..

—1-ம் பக்கத் தொடர்

கொன்ஸ்ரன்ரினேவ் குற்றம் சுமத்தியிருக்கிறார்."

"இந்தக் கருத்து நகைப்புக்கிடமானது. தன்னுடைய நாட்டிலிருந்து பலலாயிர மைல்களுக்கப்பால ஒரு கடற்படையை வைத்துக் கொள்ளும் திறமை சோவியத்துக்குக் கிடையாது. அடுத்து இந்தியா தனது விரோதியென்று கருதும் ஒரு நாட்டுக்கு இராணுவத்தளம் அமைப்பதற்கு இலங்கை உதவிபுரிய முன்வரமாட்டாது."

"அப்படி எப்போதாவது நடைபெறுமானல் — இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசத்திலுள்ள தமிழ் பிரிவினை வாதிகளுக்கு, வடக்கே 12 மைல் தொலைவிலிருந்து தற்போது வாயளவில் ஆதரவுதரும தென்னகத்தமிழர்கள், அதற்கு மேலாகவும் உதவிபுரிய முன்வருவார்கள். கிழக்குக் கரையோரத்திலுள்ள திருகோணமலை, விரக்தியடைந்து டோராடி வரும் தமிழர்களுக்கு ஒரு அதிமுக்கிய கேந்திர நிலையமாக விளங்குகிறது. அதனால் இந்தியாவுடன் மோதுவதைத் தவிர்ப்பதுவே சிறிலங்காவின் வெளிநாட்டுக் கொள்கையாக விளங்கிவருகிறது!

—இவ்வாறு Far Eastern Economic Review "பார் ஈஸ்டர்ன் எக்கனமிக் ரிவியூ" இதழில் குறிப்பிடுகிறது.

## கொழும்பில் தனி அலுவலகம்

அல்பிரட் துரையப்பா கொலை சம்பந்தமான ட்ரயல் — அற் — பார் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள 7 தமிழ் இளைஞர்கள் சம்பந்தமாகவேண்டிய சட்ட உதவிகளை புரிவதற்காக கொழும்பில் தனி அலுவலகம் ஒன்று தற்போது இயங்கிவருகிறது. அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் மேற்பார்வையில் இந்தப் பணியை தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக்கிளையும் தமிழ் மகளிர்பேரவையின்கொழும்புக்கிளையும் கவனித்து வருகின்றன. ஆவணங்களைப் பிரதியெடுத்தல், தட்டச்சிடுதல் போன்ற வேலைகள் நாள்தோறும் நடக்கின்றன.

## 1980 வரை ஆட்...

—1-ம் பக்கத் தொடர்

விசினல் அதில் சிக்கக்கூடியவர் எதிர்க்கட்சி எடி. பீக்கள் யார் யாராக இருக்கமுடியும் என்பது குறித்து அரசியல் வட்டாரங்கள் பல விதஹேஷ்யங்கள் தெரிவித்து வருகின்றன. பொதுமக்கள் மத்தியில் சில குறிக்கப்பட்டவும். பீக்களில் பெயர்கள் அடிபட ஆரம்பித்துள்ளன.

## ஒருவா உயிர்..

—1-ம் பக்கத் தொடர்

னகே டொன் சோமசிறி என்ற இராணுவ வீரர் சந்தேகத்தின் பேரில் மல்லாகம் மாவட்ட நீதவான் திரு. யேசுரத்தினம் அவர்களின் உத்தரவின் பேரில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேரம் பெறுமதியானது.

பணத்தையும் நேரத்தையும் மிச்சப்படுத்த மில்க்வைற் சலவைப் பவுடர் பாவியுங்கள்.

ஒரு இரு. பக்கற் 3/50 சதம் மட்டுமே.

மில்க்வைற சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சுதந்திரன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் பனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976ம் வருடம் செப்டம்பர் மாதம் 22 திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org